# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C 362 / 2023 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 6 |

| | | |
|---|---|---|
| Name | : | உதயகுமார் |
| Father's Name | : | மணி |
| Village | : | சிறுவாச்சூர் |
| Taluk | : | தலைவாசல், சேலம் மாவட்டம் |
| Calling | : | முதல்நிலைக்காவலர் 1740 |
| Religion | : | இந்து |
| Age | : | 38 |
| ACCUSED | | **அசீம்கான் - ஆஜரில்லை. குவிமுச பிரிவு** 317-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது**. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.02.2025.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பாடாலூர் காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 19.10.2022-ம் தேதியன்று பாடாலூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது பாடாலூர் காவல் நிலைய குற்ற எண் 228/2022 பிரிவுகள் 279, 304(எ) இதசவின் படி வழக்கு விபத்தில் இறந்து போன ராம்பிரவேஷ்குமார், வயது 40, த/பெ. ராம்சந்திரா, தாமோதரன் பர்கினா, தரம்பூர், முசாபூர், பீகார் மாநிலம், என்பவருடைய பிரேதத்தின் மீது இறப்பிற்கான காரணத்தை மருத்து ரீதியாக அறியும் பொருட்டு பாடாலூர் காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில் 14.30 மணிக்கு வேண்டுகோள் கடிதத்தை பெற்றுக்கொண்டு துறைத்தலைவர் மற்றும் பேராசிரியர் சட்ட மருத்துவத்துறை கீ.ஆ.பெ. விஸ்வநாதன் மருத்துவக்கல்லூாரி, திருச்சிராப்பள்ளி என்பவரிடம் 15.00 மணிக்கு வேண்டுகோள் கடிதத்தை கொடுத்து 15.30 மணிக்கு மருத்துவருடன்

சவக்கிடங்கிற்கு சென்று இறந்தவரின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். மேற்படி வழக்கில் இறந்தவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை முடிவடைந்தவுடன் அவரது குலவழக்கப்படி நல்லடக்கம் செய்ய மருத்துவரிடம் இருந்து பிரேதத்தையும் அதன் உடமைகளையும் பெற்று பாடாலூர் காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில் அவரது உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)**

இறந்து போன நபரின் பிரேதத்தை அடையாளம் காட்டும் போது அந்த பெட்டியில் இறந்த நபரின் பிரேதம் மட்டுமே இருந்தது என்றால் சரிதான்.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**